**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**
**SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.29/2023**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | மகேந்தி | Prosecution | P.W-1, L.W-1 |
| Father Name | க/பெ. செல்வம் | Defence | |
| Village | பழையார் | Taluk | |
| Calling | | Religion | |
| Age | 38/2024 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day **04.10.2024.**

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வீட்டு குடித்தனம் செய்து வருகிறேன். இந்த வழக்கு எதிரியை எனக்கு தெரியும். எதிரி என் கணவரின் நண்பர் ஆவார். எனக்கும் என் கணவருக்கும் இடையே சிறு சிறு சண்டை இருந்ததால் அதை மந்திரவாதியை வைத்து சரிசெய்து தருவதாக கூறி என்னிடம் பணம் ரூபாய் 50,000 பெற்று சென்றார். மந்திரவாதியை பார்த்ததால் அவருக்கு உடல் நலகுறைவு ஏற்பட்டதாகவும் ஆஜர் எதிரி என்னுடன் தொடர்பில் இருக்க வேண்டும் என்று மந்திரவாதி சொன்னதாக கூறி கடந்த 17.03.2022 தேதி மாலை 05.00 மணியளவில் நான் வீட்டில் இருந்த போது ஆஜர் எதிரி புகழேந்தி என்பவர் என் வீட்டிற்கு வந்து என்னை அவருடன் சேர்ந்து இருக்க சொல்லி கட்டாயப்படுத்தி குச்சிகாரி , தேவுடியா என்று திட்டி அவருடன் என்னை தொடர்பில் இருக்க சொல்லி என்னை மிரட்டினார். அதனால் அவருக்கு நான் பணம் கொடுத்தேன். பணம் பெற்று கொண்டு ஒரு சில நாட்கள் அமைதியாக இருந்துவிட்டு மீண்டும் என்னை மிரட்டினார். நான் இதுவரை ரூபாய் 5,00,000 ஆஜர் எதிரிக்கு கொடுத்து உள்ளேன். எதிரியை பற்றி என் கணவரிடம் சொல்லக்கூடாது என்றும் என்னிடம் பணம் கேட்டும் மீண்டும் மீண்டும் என்னை தொந்தரவு செய்வதால் நான் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். நீதிமன்றத்தில் என்னிடத்தில் காட்டபடும் புகார் வாக்குமுலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள விவரம் எனக்கு தெரியும். **அந்த புகார் மனு அ.சா.ஆ .1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் 4ஆம் வகுப்புவரை படித்துள்ளேன். எனக்கு எழுதப்படிக்கத் தெரியும் என்றால் சரிதான். செல்வம் எனது கணவர், சபரிநாதன், அன்செல்வன் எனது ஊர்காரர்கள். பவனிகா எனது மகள். புகழேந்தியை எனக்கு எனது கணவர்மூலமாகத்தான் தெரியும். எதிரியின் வீடு எங்குள்ளது என்றால் புதுப்பட்டினத்தில் உள்ளது. எனது வீட்டிற்கும் எதிரியின் வீட்டிற்கும் சுமார் 5 km இருக்கும் என்றால் சரிதான். எனது பெயரில் சொந்தமாக மீன்பிடி போட் உள்ளது என்றால் சரிதான். போட்டின் RC புத்தகத்தைவைத்து எதிரி புகழேந்தி என்பவர் அவரது அண்ணன் மணி என்பவரிடம் ரூ. 4,50,000/- கடனாக வாங்கிக் கொடுத்தார் என்றால் சரிதான். எனது வீட்டு பத்திரத்தைவைத்து எதிரி புகழேந்தி மூலம் சாதிக் என்பவரிடம் ரூ.3,00,000/- கடனாக பெற்றோம் என்றால் சரிதான். எதிரியின் மனைவியின்மூலம் குழுபணம் எனக்கு ரூ.25,000/- எழுத்துக்கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. கைப்பிள்ளை என்பவரிடம் ரூ.30000/- கடனாகவும், திவ்யா என்பவரிடம் ரூ.30000/-உம் கடனாக பெற்றுக்கொடுத்தார் என்றால் சரியல்ல. எதிரிக்கும் எங்களுக்கும் பணம் கொடுத்தல் வாங்கள் பிரச்சனை உள்ளது என்றால் சரியல்ல. எனக்கும் எனது கணவருக்கும் சிறுசிறு பிரச்சனை உள்ளதான என்றால் உள்ளளது. எனக்கும் எனது கணவருக்கும் உள்ள பிரச்சனை பற்றி நான்தான் எதிரியிடம் சொன்னேன். எதிரியிடம் மந்திரவாதியை பார்க்க ரூ.5 லட்சம் கொடுத்தற்கும் ஆதாரம் உள்ளதா என்றால் இல்லை. எனது குழந்தைகளுக்கு அதுபற்றிய விபரம் தெரியும். மந்திரவாதியை பார்க்க எப்படி பணம் கொடுத்தேன் என்றால் ரூ.50,000, ரூ.20,000, ரூ. 30,000/- மாக கொடுத்தேன். பணம் கொடுக்கும்போது மந்திரவாதி எங்கு என்று நான் கேட்டேனா என்றால் நான் கேட்கவில்லை. மேற்படி சம்பவம் பற்றி எனது கணவருக்கு தெரியாது. நான் பணம் கொடுத்த பிவரம் எனது கணவருக்கு தெரியாது. வரவு செலவுகளை நான்தான் பார்ப்பேன். மேற்படி சம்பவம் தொடர்பாக நான் காவல் நிலையத்தில் கொடுக்கவில்லை என்றால் சரிதான். எதிரி 17.03.2022 தேதி அன்று எதிரி என்னிடம் தகாத முறையில் நடந்து கொண்டும் காமகுரோமான வார்த்தையால் பேசினார். அது சம்பந்தமாக நான் அன்று காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். அப்படி ஒரு சம்பவம் நடக்கவில்லை அதனால் தான் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை சரியல்ல. என் கணவருக்கு தெரியாமல் எதிரியிடமும் எதிரியின் அண்ணன் மணி மற்றும் எதிரியின் மூலமாக சாதிக் என்பவரிடம் பணம் எதிரி புகழேந்தி கடனாக பணம் வாங்கி கொடுத்தார் என்றாலும் அதை திரும்ப கேட்ட போது எதிரி மீது பொய்யாக வழக்கு கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. புகார் மயிலாடுதுறை காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் 21.03.2022 கொடுத்தேன். நான் கொடுத்து புகார் பொய் புகார் என்பதால் காவல் நிலையத்தில் புகார் எடுக்கவில்லை என்பதால் மயிலாடுதுறை காவல் கண்காணிப்பாளர் கொடுத்தேன். புகார் தாண்டவன்குளம் காளிதாஸ் என்பவர் தான் எழுதி

கொடுத்தார். நான் கைப்பட எழுதவில்லை. போலீசார் என்னை 04.05.2022 தேதிவிசாரித்தார்கள்.சம்பவம்சபரிநாதன்,அன்புசெல்வன்,மௌனிகா,அண்ணா துரை,சின்னதம்பி,சேகர், ஆகியோருக்கு சம்பவம் தெரியும் என்றால் சரிதான். எதிரி என் கொடுத்த பணத்தை கேட்டதால் தான் பொய் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.**

**மறு விசாரணை இல்லை.**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**
**SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.29/2023**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | செல்வம் | Prosecution | P.W-2, L.W-2 |
| Father Name | பரசுராமன் | Defence | |
| Village | பழையார் | Taluk | |
| Calling | | Religion | |
| Age | 45/2024 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day **04.10.2024.**

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் மீன் பிடிக்கும் தொழில் செய்து வருகிறேன். அ.சா.1 என் மனைவி ஆவார். இந்த வழக்கு எதிரியை எனக்கு தெரியும். அவர் என்னுடன் மீன் பிடிக்கும் வேலை செய்து வந்தார். கடந்த 17.03.2022 தேதி மாலை 05.00 மணிக்கு நான் வீட்டின் பின்புறம் இருந்த போது வீட்டில் சத்தம் கேட்டது. நான் வீட்டிற்கு உள்ளே வந்து பார்த்தபோது ஆஜர் எதிரி என் மனைவியிடம் சண்டை போட்டு கொண்டு இருந்தார். தேவுடியா,குச்சிகாரி என்று காமகுரோமாக திட்டி கொண்டு இருந்தார். நான் ஏன் இவ்வாறு பேசுகிறாய் என்று கேட்டேன். அதன் பின்பு ஆஜர் எதிரி சென்றுவிட்டார். அவர் சென்ற பிறகு ஏன் ஆஜர் எதிரி சண்டை போட்டார் என்று கேட்டேன். என் மனைவியிடம் ஆஜர் எதிரி தவறாக பேசிய விவரத்தை சொன்னார். ஆஜர் எதிரியும் என் மனைவியிடம் பேசிய ஆடியோவை என் செலுக்கு அனுப்பி வைத்தார். என் பெரிய மகள் போனுக்கும் அனுப்பி வைத்து இருந்தார். ஏதாவது பிரச்சனை செய்தால் என்னையும் என் மகளையும் மிரட்டினார். புதுப்பட்டினம் காவல் நிலையத்திற்கு அருகில் புகேழுந்தி குடியிருந்து வருவதால் புகார் கொடுக்காமல் மாவட்ட ஆட்சியர் மற்றும் காவல் கண்காணிப்பாளரிடம் என் மனைவி புகார் கொடுத்தேன். அது சம்பந்தமாக புதுப்பட்டினம் போலீசார் எங்களை அழைத்து விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரி எனக்கு தான் பழக்கம் என்றால் சரிதான். என் பழக்க வழக்கம் மூலமாக தான் என் மனைவிக்கு பழக்கம் என்றால் சரிதான். என் மனைவிக்கும் எதிரிக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக எனக்கு

தெரியாது. மந்தரவாதி பற்றி பணம் வாங்கியது சம்பந்தமாக எனக்கு தெரியாது என்றால் சரிதான். எதிரி என் மனைவியிடம் தவறாக பேசியது சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான். 17 ம் தேதி நடந்த சண்டை தெரியும். எதிரி அனுப்பி ஆடியோவை காவல் கண்காணிப்பாளரிடம் கொடுத்தோம். புதுப்பட்டினம் போலீசாரிடம் கொடுக்கவில்லை. அந்த ஆடியோவில் எதிரிக்கு நான் பணம் கொடுக்க வேண்டியது சம்பந்தமாக எனக்கு அனுப்பி இருந்தாலும் அதனால் தான் புதுப்பட்டினம் காவல் நிலையத்தில் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரி தவறாக பேசி இருந்தால் எனக்கு அனுப்ப வேண்டிய அவசியம் இல்லை. 17.03.2022 தேதி உண்மையில் சண்டை நடந்து இருந்தால் நான் விலக்கி இருப்பேன் என்றாலும் நான் சொல்வது போல் சண்டை நடக்கவில்லை என்றால் சரியல்ல. நான் எதிரியிடம் வாங்கி பணத்தை திரும்ப கேட்டதால் தான் எதிரி மீது என் மனைவியை வைத்து பொய்யாக புகார் கொடுத்துள்ளார் என்றாலும் அதற்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் எதிரியிடம் பணம் வாங்கவில்லை. நான் எதிரியின் அண்ணனிடம் தான் பணம் வாங்கி இருந்தேன். சம்பவத்தை பற்றி நேரடியாக தெரியாது என்றாலும் நான் சம்பவம் உண்மை என்றால் புதுப்பட்டினம் போலீசாரிடம் கொடுத்து இருப்பேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.**

**மறு விசாரணை இல்லை.**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**
**SIRKALI**
**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
**Case No.CC.29/2023**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | சபரிநாதன் | Prosecution | P.W-3, L.W-3 |
| Father Name | புண்ணியமூர்த்தி | Defence | |
| Village | பழையார் | Taluk | |
| Calling | | Religion | |
| Age | 33/2024 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day **04.10.2024.**

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் மீன் பிடிக்கும் தொழில் செய்து வருகிறேன். அ.சா.1,2டை எனக்கு தெரியும். அவர் என்னுடன் மீன் பிடிக்கும் வேலை செய்து வந்தார். கடந்த 17.03.2022 தேதி மாலை 05.00 மணிக்கு நான் வீட்டில் இருந்து மீன் பிடிக்க செல்ல வெளியே வந்த போது ஆஜர் எதிரி செல்வத்தை கெட்ட வார்த்தையில் திட்டி கொண்டு இருந்தார் நான் வேலைக்கு சென்று விட்டேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

அ.சா.1,2க்கும் ஆஜர் எதிரிக்கும் என்ன பிரச்சனை என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். சண்டை நடந்தது பற்றி முழு விவரம் தெரியாது என்றால் சரிதான். நான் உடனே படகுக்கு சென்று விட்டேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை. அ.சா.1 எனக்கு பக்கத்து வீட்டுகாரர் என்பதால் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடன் சம்பவ இடத்தில் வேறு யாரும் இல்லை என்றால் சரிதான்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.**

**மறு விசாரணை இல்லை.**